அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 13/99

எனது இல. ஆ/111/2/8-5.
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு -07.
1999..09.11.....ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

அரசின் அங்கீகாரத்துடன் வெளிநாட்டு நிதிகளை ஈடுபடுத்தும் அமைச்சுக்களின் கீழுள்ள கருத்திட்டங்களில் சேவையாற்றுவதற்காக அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்குதல்.

<u>தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தை திருத்துதல்</u>

1991 நவம்பர் 10 ஆந் திகதிய 52/91 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. இலங்கை அரசின் தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16:1:4 ஆம் பிரிவை பின்வருமாறு திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

16:1:4 அரசின் உடன்பாட்டுடன் இலங்கையில் அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம், உலக சுகாதார இயக்கம் போன்ற வெளிநாட்டு முகவர் நிறுவனங்களில் தொழில் புரிவதற்காக சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு ஐந்து (05) வருடங்களுக்கு மேற்படாத காலத்திற்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கலாம். அரச அங்கீகாரத்துடன் வெளிநாட்டு நிதிகளை முதலீடு செய்கின்ற அமைச்சுக்களின் கீழுள்ள கருத்திட்டங்களில் தொழில் புரிவதற்காகவும் இவ் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்"

ஒப்பம்/. பீ. ஏ. சேனாரட்ன
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.